Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 389

National TAMIL DAILY தேசிய தினசரி

தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ வைகாசி 11 ஆம் நாள் துல்ஹஜ் 8 (24-5-61) புதன்கிழமை இதழ் 85

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

பெங்களூர்–2.

# இரவு 10 முதல் காலை 4

## மணிவரை ஊரடங்கு நேரம் குறைக்கப்பட்டது

### வவனியாவில் சட்டம் முற்றாக நீக்கப்பட்டது

### தடுப்புக் காவலிலிருந்து சிலர் விடுதலையடைவர்

கொழும்பு, புதன்

வவனியாவில் இன்று முதல் ஊரடங்குச் சட்டம் முற்றாக நீக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் இதர பகுதிகளில் இன்று முதல் இரவு 10 மணி தொடக்கம் காலை 4 மணிவரை மட்டுமே ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும்.

தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பவர்களில் சிலர் இன்று அல்லது நாளை விடுதலை செய்யப்படுவார்கள். ஆனால் விடுதலை செய்யப்படுபவர்களில் பார்லிமெண்ட் அங்கத்தினர்கள் எவரும் இருக்க மாட்டார்கள்.

பாதுகாப்பு–வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இத்தகவலை நேற்று அறிவித்தார்.

## சாரம் அணிந்த பிக்கு கைது

### துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது

நிக்கவெரட்டியா, செவ்வாய்

இன்று காலை நிக்கவெரட்டிய பொலிசார், ஒரு புத்த பிக்கு உட்பட கார் ஒன்றில் பிரயாணம் செய்துகொண்டிருந்த 5 பேரைக் கைது செய்தனர். குறித்த பிக்கு, சாரமும் தலைப்பாகையும் அணிந்திருந்தாய் பொலிசார் கூறினர். அவருடைய மஞ்சள் அணிகள் காரின் பின்புறத்தில் வைக்கப்பட்டிருந்தன. காரிலிருந்த ஏராளமான காட்ரஜ்களும் லைசன்ஸ் பெறாத துப்பாக்கி ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

## பிலிப்புக்கு ஒரு வாரம் சபையிலிருந்து தடை

### சபாநாயகர் உத்தரவுக்கு கீழ்ப்படியாதது காரணம்

கொழும்பு, புதன்

நேற்று பிற்பகல் ஜனப்பிரதிநிதிகள் சபையில் அவிசாவலை எம். பி. திரு. பிலிப் குணவர்த்தன, கடந்த 18-ம் திகதி சம்பிரதாயத்தை மீறி, சபைக்கு அவமரியாதை உண்டுபண்ணும் முறையில் நடந்து கொண்டதினால் அவரைக் குற்றவாளி எனக் கூறும் பிரேரணையை, சபை முதல்வர் திரு. ஸி. பி. டி சில்வா கொண்டுவந்தார்.

இக்கூட்டத்தில் சபாநாயகர் அவரை ஏதாவது கூற விரும்புகிறீர்களா எனக் கேட்டார். இப்பிரேரணை உரிமைச் சட்டத்துக்கு அப்பாற்பட்டதென்றும் கோட்டே அங்கத்தினருக்கும், தமக்கும் ஏற்கனவே இதற்காகத் தண்டனை அளிக்கப்பட்டுவிட்டதென்றும், மீண்டும் தண்டனை அளிக்கக் கூடாதென்றும் அவிசாவலைப் பிரதிநிதி பதிலளித்தார்.

திரு. டட்லி சேனநாயக்கா, திரு. டபிள்யூ. தகநாயக்கா ஆகியோர் பிரஸ்தாப பிரேரணை உரிமைச் சட்டத்திற்கு அப்பாற்பட்டது என மேற்கோள் காட்டினர். உரிமைச் சட்டத்திற்கு உட்பட்டதுதான் என சபை முதல்வர் அதற்குப் பதிலளிக்கையில் மேற்கோள் காட்டினர்.

### ஒரு வாரம் தடை

உரிமை பற்றிய பிரேரணை சபையில் விவாதிக்கப்பட்ட போது திரு. பிலிப் குணவர்த்தன பேசிக் கொண்டிருந்தார். அவரை உட்காருமாறு சபாநாயகர் பணித்தும் கீழ்ப்படியாதலால் சபாநாயகர் அவரை ஒரு வாரம் சபைக் கூட்டத்திலிருந்து தடை செய்தார். சபை நடவடிக்கையை 20 நிமிடம் ஒத்திவைத்து சபாநாயகர் தன் ஆசனத்தைவிட்டுச் சென்றதும் திரு. பிலிப் குணவர்த்தன வெளியேறிவிட்டார்.

(6ம் பக்கம் பார்க்க)

## வகுப்புவாதிகளுக்கு தடுப்புக் காவல்

### இந்திராகாந்தி கமிட்டி தெரிவித்துள்ள யோசனை

புதுடில்லி, மே 23

வகுப்பு சச்சரவு எந்தப்பிரதேசத்திலாவது மோசமடைந்தாலோ அல்லது அமைதிக்கு ஆபத்து ஏற்பட்டாலோ சம்பந்தப் பட்டவர்களைத் தடுப்புக் காவலில் வைக்கவேண்டுமென்று தேசிய ஒற்றுமைக் கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. இந்திய தண்டனைச் சட்டத்தை இன்னும் கடுமையாக்குமுகமாக, தக்கபடி அதைத்திருத்த வேண்டுமென்றும் அது ஆலோசனை கூறியிருக்கிறது. தேசிய உணர்ச்சியைத் தோற்றுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பெடரல் பொலிஸ் படை ஒன்று நிறுவுவதுபற்றி

(6-ம் பக்கம் பார்க்க)

## தொகுதிகளில் நடைபெறும் வேலைகள்

### ஸ்தல எம். பி. க்களுக்கு அனுப்பப்படும்

கொழும்பு, புதன்

நேற்று சபைமுதல்வர் திரு. ஸி. பி. டி. சில்வா தலைமையில் நடைபெற்ற பாராளுமன்றக்கட்சிக் கூட்டத்தில், ஒவ்வொரு தொகுதியிலும் அரசாங்கம் மேற் கொண்டுள்ள வேலைகள் பற்றிய அறிக்கையை நடப்பு ஆண்டு முதல் குறிப்பிட்ட காலத்திற்கொரு தடவை அந்தந்தத்தொகுதி பார்லிமென்ட் அங்கத்தினருக்கு அனுப்பி வைப்பதெனத் தீர்மானிக்கப் பட்டிருக்கிறது.

## "இ. போ. ச. கொல்லப்படுகிறது"

கொழும்பு, செவ்வாய்

"இலங்கை போக்குவரத்து சபையை, தனிப்பட்ட "வான்"கள் கொல்லுகின்றன" என்று இ. போ. ச. தலைவரும், மெம்பர் பி. டி. ரம்பாலாவும், தீவில் பல இடங்களில் நேரில் சென்று பார்த்தபின் தெரிவித்துள்ளனர்.

## 10 ஆயிரம் க்ஷயரோக குழந்தைகள்

கொழும்பு, செவ்வாய்

கொழும்பு நகரில் 3000துக் கதிகமான வீடுகளில் 10 ஆயிரத்துக்கதிகமான குழந்தைகள் க்ஷயரோகத்தினால் பாதிக்கப் பட்டிருக்கிறார்கள் என சமீபத்தில் எடுக்கப்பட்ட புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

## புதிய ஏற்றுமதி வரி

கொழும்பு, செவ்வாய்

தேங்காய்ப் பொருள்கள்மீது புதிய ஏற்றுமதி வரிகள் விதிக்குமாறு பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா சுங்க வரி இலாகா அதிகாரிக்கு கட்டளை பிறப்பித்துள்ளார்.

கொப்பரா, தேங்காய் எண்ணெய், தேங்காய்த் துருவல் ஆகிய பொருள்களுக்கான ஏற்றுமதிவரி பற்றிய மசோதா ஒன்றை ஜனப்பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பித்து அங்கு அங்கீகாரம் பெற்றால் இந்த வரி நடைமுறைக்கு வருமென அரசியல் வர்த்தமானி ஒன்று அறிவிக்கிறது.

செனட் சபை

## 'அவசரகால நிலையை நீடிக்க அவசியம் கிடையாது'

### "கிழக்கு மாகாணத்தில் இன்னும் ராணுவ தர்பார் நடக்கிறது"

—செனட்டர் நடேசன்

கொழும்பு, புதன்

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளில் ஒரு சாராரை வீட்டுக்காவலில் வைத்துவிட்டு, மக்களுடன் தொடர்புள்ள அலுவல்களை அரசாங்கம் செய்துவருவது அநீதியானது என்று நேற்று நடைபெற்ற செனட்சபைக் கூட்டத்தில் செனட்டர் நடேசன் கூறினார்.

நேற்று மாலை, ஸர் சிரில் டி சொய்ஸா தலைமையில் பெட்ரோலிய மசோதா ஒத்திவைப்புப் பிரேரணை நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாண நிலைமைபற்றி திரு. நடேசன் பேசினார்.

"அரசாங்க அலுவல்களை அவசரமாக முடிப்பதற்காக வடக்கு, கிழக்கு நிலைமைபற்றி விவாதிக்க அரசாங்கம் சம்மதிக்காதபடியால், ஒத்திவைப்பு பிரேரணை நேரத்தில் வடக்கு, கிழக்கு நிலைமைபற்றி தினமும் பேச முடிவு செய்திருக்கிறேன்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் அமைதியைக் குலைக்கும் வகையில் எதுவும் நடைபெறாததால், அவசரகால நிலையை நீடிக்க வேண்டிய அவசியமில்லை. அவசரகால நிலையை நீக்கிவிட்டால் சத்தியாக்கிரகம் மீண்டும் ஆரம்பமாகுமென அரசாங்கம் பயப்பட்டால் ஆண்டுக்கணக்கில் அப்படியே அதை வைத்துக் கொண்டிருக்க வேண்டும். 20 வருடங்கள் சென்றாலும் இப்பிரச்சினை தீராது.

அரசாங்க அலுவல்களை நடத்துவதற்கு பொதுமக்கள் தடையாக இருக்கிறார்கள் என அரசாங்கம் பீதியடைந்தால்

(6-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

"எவன் ஆசைகளை அறவே அகற்றி பற்றற்று அகங்கார, மமகாரமின்றி நடமாடுகிறானோ அவன் சாந்தியடைகிறான்."

— பகவத்கீதை


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு வைகாசி மீ 11உ (24-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## கைத்தொழில் நீதிமன்றங்கள்

கைத்தொழில் தகராறுகளை விசாரித்து தீர்ப்பளிக்க புதிதாக ஐந்து கைத்தொழில் நீதிமன்றங்கள் நியமிக்கப்பட விருப்பதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது. இது வரவேற்கத்தக்கதாகும்.

நாட்டில் கைத்தொழில் தகராறுகளின் எண்ணிக்கை வர வர அதிகரித்து வருகின்றன. அத்தகராறுகளைக் கைத்தொழில் நீதிமன்றங்கள் மூலம் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள சட்ட வசதியிருக்கின்றதென்ருலும் உண்மையில், இது சிறப்பாக தொழிலாளருக்கு உதவியளிப்பதாக இல்லை. சில தகராறுகள் ஏற்பட்டு மூன்று வருடங்களாகியும், தீர்ப்பு கிடைக்காமலுள்ளன. இதனுல் தொழிலாளர் பலர் தங்கள் குடும்பங்களுடன் பல வருடகாலம் ஜீவனத்துக்கு வழியின்று அவதிப்பட வேண்டியவர்களாக உள்ளனர். அதிக கோடுகள் நியமிக்கப்படுவதாயின் விசாரணைக்கு ஏற்படும் தவக்கம் குறைந்து சீக்கிரத்தில் நியாயம் கிடைக்க முடியலாம். "நீதியைத் தவக்கப்படுத்துவது, நீதியை மறுப்பதாகும்" என்று கூறுவதுண்டு. புதிதாக பல கைத்தொழில் நீதிமன்றங்களை நிறுவதால், இக்குறை ஓரளவு நீங்க வேண்டும்.

இதுபற்றி ஒரு தொழிலாளர் யூனியன் தலைவரை விசாரித்ததில், தொழில் கோடுகளிலே தங்களுக்குச் சிறிதும் நம்பிக்கையில்லை என்றும், அதில் தொழிலாளருக்கு நீதி கிடைப்பது குதிரைக் கொம்பென்றும் கூறினர். அம்மன்றங்களுக்கு நியமிக்கப்படும் நீதிபதிகள், தொழிலாளர் விஷயங்களில் அனுதாபமுள்ளவர்களாகவும் முற்போக்கு கருத்துக் கொண்டவராகவும் இருக்க வேண்டுமென்றும் தெரிவித்தார். இரண்டு வாரங்களுக்கு முன் சென்னை ஹைகோர்ட்டின் தலைமை நீதிபதி ராஜமன்னர், பிரியாவிடை கூட்டமொன்றில் பேசுகையில், பொதுவாக நீதிபதிகள், அரசாங்கத்தின் சமதர்ம நோக்கத்தை மறவாமல், முற்போக்கான முறையில் தீர்ப்புகள் கூற வேண்டுமென்று கூறப்பட்ட யோசனையை ஆதரித்தார். இலங்கையில் கைத்தொழில் நீதிமன்றங்கள் இந்த யோசனையைப் பின்பற்றுவதாயின், தொழிற் சங்கங்களின் இழந்த நம்பிக்கையை மீண்டும் பெற முடிவதுடன், நாட்டில் தொழில் அமைதியும் நிலவ உதவியாக இருக்கும்.

இம்மன்றங்களுக்கு நீதிபதிகளாக நியமிக்கப்படுபவர்கள் வாலிபர்களாகவும், முற்போக்கு எண்ணமுள்ளவர்களாகவும் இருப்பின் தொழிலாளர் யூனியன்களுக்கு இம்மன்றங்களில் அதிக நம்பிக்கை ஏற்படவும் வேலை நிறுத்தங்கள் பெரிதும் குறைந்துவிடவும் கூடும். புதிதாக நியமிக்கப்படும் கைத்தொழில் கோடுகளுக்கு நீதிபதிகளை நியமிக்கையில் அமைச்சர் இதை மனதில் இருத்துவது விரும்பத்தக்கது.

# விசா கந்தோரை மூடுவதற்கு ஆட்சேபனை

## தென்னிந்தியர்கள் அடைந்துள்ள கவலை

கொழும்பு, செவ்வாய்

பொருளாதார நோக்கம் குறித்து திருச்சியிலுள்ள விசா கந்தோரை மூடி அங்குள்ள விசா அதிகாரியை சென்னை ஸ்தானிகர் காரியாலயத்துக்கு மாற்றி அங்கிருந்து விசாக்களை வழங்குவதென இலங்கை அரசாங்கம் செய்துள்ள ஆலோசனை தென் இந்தியர்களுக்குப் பெரிதும் கவலையளித்துள்ளது. திருச்சிக்கு அருகாமையிலுள்ள ராமநாதபுரம், கேரளம், திருவேந்திரம் ஆகிய இடங்களிலிருந்தே அதிகமான இந்தியர் இலங்கைக்குச் செல்கின்றனர் என்று அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல உல்லாசப் பிரயாணிகளுக்கு இதனுல் வசதியினமும் செலவும் அதிகரிப்பதால் அதிகம்பேர் இலங்கை செல்ல விரும்பார்களென்றும் இது காரணமாக இலங்கை இத்துறையில் கிடைக்கும் பணத்தை இழக்கநேரிடு[ம்] என்றும் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். வெளிநாடுகளிலிருக்கும் சில விசாக்கந்தோர்களில் திருச்சியிலிருக்கும் விஸாக் கந்தோரே அதற்குச் செலவாகும் பணத்தில் அரைவாசிப் பணத்தை விஸாக்கட்டணமாகப் பெற்றுக் கொடுக்கின்றது என்றும் இவ்வித ஆலோசனை திருச்சியிலுள்ள விமானக் கந்தோரையும் பாதித்து இறுதியில் இக்கந்தோரை மூடவேண்டிய நிலை வந்துவிடுமெனவும் அவர்கள் கூறியுள்ளார்கள். திருச்சியிலுள்ள விஸா கந்தோருக்கு மாதத்துக்கு 800 விண்ணப்பங்கள் கிடைக்கின்றன. சென்னையிலுள்ள விஸாக் கந்தோர் இதில்கால் பகுதியையே கையாளுகிறது.

இலங்கையினுள்ள செட்டியார் வர்த்தக சங்கமும் பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சுக்கு இது விஷயமாக ஆட்சேபனை தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது.

# அலபாமாவில் இனவெறி நீக்கிரோக்களுக்கு உதை

## கென்னடி பிரதிநிதி தாக்கப்பட்டார்

மாண்ட்கொமரி, மே 23

அலபாமாவில் நடைபெற்ற வகுப்புக் கலவரத்தின் காரணமாக ஐக்கிய அமெரிக்க சமஷ்டித் துருப்புகள் இங்கு சமீபத்தில் அனுப்பப்பட்டுள்ளன.

மாண்ட் கொமரியில் அமைதியை நிலைநாட்ட 400 இராணுவ வீரரைக்கொண்ட இந்த இராணுவப்படையைஅமெரிக்க ஜனதிபதி திரு. கெனடி அங்கு அனுபியுள்ளார். இவர்களெல்லோரும் சாதாரணஉடை அணிந்திருந்தாலும் துப்பாக்கிகள் தாங்கியுள்ளனர்.

ஐக்கிய அமெரிக்க அட்டர்னி ஜெனரல் திரு. ருெபேர்ட் கெனடி தமது பிரதான உதவியாளராகிய திரு. பைரன் வைட்டை மாண்ட்கொமரியில் அலுவல்களைக் கவனிக்க அங்கு அனுப்பியுள்ளார்.

திரு. வைட் பத்திரிகை நிருபர்களுக்களித்த பேட்டியொன்றில், சமஷ்டி இராணுவத் துருப்பினர் அலபாமாவுக்கு வருவது அங்கிருக்கும் பொலிஸாருக்கு உதவிபுரிந்து அமைதியை நிலைநாட்டுவதற்கே என்றும் இராணுவத்தினரின் ஒரு கடமை பஸ்களில் 'சுதந்திரமாகச் சவாரிசெய்வோர்' குழுவின் புதிய 'கலப்புப்' பகுதியினர் ஒன்ருகச் செல்வதைத் தடுப்பதாக இருக்கும் என்றும் தெரிவித்தார்.

அலபாமாவிலுள்ள பர்மிங்காம் மேயர் திரு. இயுஜீன் கொனர் ஜனதிபதி கெனடிக்கு அனுப்பியுள்ள தந்தியில் தீவிர இயக்கங்களான நிறமக்களின் முன்னேற்றத்துக்கான தேசிய இயக்கம் இனசமத்துவத்துக்கான காங்கிரஸ் போன்ற இயக்கங்களின் எதிர்ப்புக்கு முடிவு செய்யுமாறு கேட்டுள்ளார்.

கெனடி அரசாங்கம் அலபாமா சமஷ்டி நீதிமன்றத்தை பிரிவினை இயக்கங்களைத் தடை செய்யுமாறு அறிவித்துள்ளது.

ஒரு பஸ்ஸில் 'சுதந்திரசவாரி செய்வோர். என்று தம்மைக் கூறிக்கொண்டு அலபாமாவிலுள்ள சட்டத்தை எதிர்த்து. வந்த நீக்கிரோ வெள்ளை மாணவர்களை 1000 வெள்ளையர் தாக்கியதால் 20 பேர் படுகாயமடைந்தனர். இதில் ஜனதிபதி கெனடியின் பிரதிநிதி திரு. ஜோன் செயின்கலரும் ஒருவர். ஒரு பெண்ணைக் காப்பாற்ற முனைந்தபோதே அவர் இவ்வித தாக்குதலுக்குள்ளானர்.

## தொழிலின் மகத்துவம்

உடுப்பிட்டி, செவ்வாய்

"ஆசிரியரென்போர் வெறும் உத்தியோகத்திற்காக உழைப்பவரன்று. தனிப்பட்ட மாணவரின் அறிவியலை வளர்த்து அவர்கள் சிறந்த புருடத்துவத்தை அடைய உதவும் குறிக்கோளை மேற்கொண்டு அவர்கள்பணியாற்றவேண்டும். சிறப்பாக, இன்றைய சமூக,பொருளாதாரச் சிக்கல்களும், பிரச்சினைகளும் இறுகப் பிணைந்துள்ள சூழலில், தொழில்களின் மகத்துவத்தை மாணவர் உணரும்படி செய்து, 'செய்தொழில்' வேற்றுமையை அகற்ற முயலவேண்டும். தொழில்வழிகாட்டுதலின் முக்கியத்துவம் இப்பெரும்பணியிலேயே தங்கியுள்ளது."

இவ்வாறு பலாலி அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் திருமதி. இரதிதேவி ஆனந்தக்குமாரசாமி யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் தொழில்வழிகாட்டும் பயிற்சி முடிந்து வெளியேறும் இவ்வாண்டு மாணவர் தமக்களித்த பிரியாவிடை உபசாரத்தில் கூறினர்.

பண்டிதர் பொ. கிருஷ்ண பிள்ளை, திருமதி. வேதவல்லி கந்தையா ஆகியோரும் பேசினர். இவ்வைபவ இறுதியில் திருமதி ஆனந்தக்குமாரசாமிக்கு ஓர் அன்பளிப்பு வழங்கப்பட்டது.

## வீடு கொடுக்க முன்னர் மூன்று கேள்விகள்

கொழும்பு, செவ்வாய்

ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீர வீடுகள் வழங்கும் தமது அமைச்சின் சபைக்கு பிறப்பித்த கட்டளையொன்றில் கீழ்க் கண்ட கேள்விகளுக்குத் தகுந்த பதில் கொடுப்பவர்களுக்கே கொழும்பிலுள்ள அரசாங்க வீடுகள் வழங்கப்படவேண்டுமென அறிவித்துள்ளார்.

1. கொழும்பில் வதியவேண்டியதன் அவசியம்.

2. பிள்ளைகளின் பள்ளிக்கூடப் படிப்பு நிலை.

3. விண்ணப்பதாரரின் வாழ்க்கை நிலை.

இதுசம்பந்தமாக இச்சபையின் தலைவர் திரு. வி. சி. ஜயசூரியா சபையுடன் ஆலோசனை செய்து பம்பலப்பிட்டியில் 32 புதிய வீடுகளை ஒதுக்கியுள்ளார்.

## ஆஸ்பத்திரியில் சாதிப் பாகுபாடா?

உடுப்பிட்டி, செவ்வாய்

வடமராட்சியிலுள்ள சில அரசினர் வைத்தியசாலைகளில் கடமையாற்றும் சில ஊழியர்கள் சிறுபான்மைத் தமிழராகையால் அதே தொழிலைச் செய்யும் உயர்சாதி ஊழியர் உணவு, நீர் முதலிய விஷயங்களில் பாகுபாடுகள் காட்டி வருவதாகத் தெரிகிறது. இது விஷயமாக ஒரு கடிதம் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியத்துக்கும், சுகாதார அமைச்சுக்கும் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

## புதிய ஜே. பி.க்கள்

நீதி அமைச்சரால் நியமனம் செய்யபபட்ட சமாதான நீதிபதிகளின் (ஜே. பி.) பெயர்கள் வருமாறு:

முகாந்திரம் டி.ஏ.டி'கொஸ்தா (கொழும்பு) ஜனப் என். எம். எம். பிஷ்றுல் ஹாவி (அவிசாவலை) ஜனப் எம். ஏ. எவ். ஹஜ்ஜியார் (கழுத்துறை) திரு. என். டபிள்யூ. சி. டி' சில்வா (அம்பாந்தோட்டை) திரு. சி. அழகப்பெருமாள் (மாத்தறை) திரு. ஏ. எஸ். சாட்டூர் (கொழும்பு) திரு. ஏ.எல்.எச். பெரேரா (கம்பகா) திரு. டி. சி. அப்புகாமி (கேகாலை) திரு. அலெக்சாந்தர் டி'சில்வா (கழுத்துறை) ஜனப் எஸ். ஏ. மௌலானு (கொழும்பு) திரு. டி. ரி. ராஜபக்ஸ (கம்பகா)

# மாணவனுக்கு அதிர்ஷ்டம்

## சுவீப்பில் முதற் பரிசு

யாழ்ப்பாணம், புதன்

19 வயதான கே. பாலகுமாரன் பரீட்சையில் தோற்ற அதிர்ச்சி மாறுமுன்னர் மற்ருெரு அதிர்ச்சியை சமாளிக்க வேண்டி வந்தது. ஆஸ்பத்திரி சுவீப்பில் முதற் பரிசான 62,000ருபா அவருக்கேகிடைப்பதென்ருல் அதிர்ச்சியாக இருக்காதா!

வல்வெட்டித்துறை வாசியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவருமாகிய இவர் தமது பெற்ருேர், சகோதரர் ஆகியோரின் ஆலோசனையுடனேயே இப்பணத்தைப் பயன்படுத்துவார் எனத் தெரிகிறது.

## ஒரு நேரப் பாடசாலை

மன்னர், செவ்வாய்

மன்னர் பட்டினத்திலுள்ள நல்லாயன் ஆண் பாடசாலை இப்போது ஒரு நேரப் பாடசாலையாக மாறிக்கொண்டுள்ளது. அவசரகால நிலைமையும் பிள்ளைகளின் விருப்பமும் இம்முடிவுக்கு வந்ததாகத் தெரிகிறது.

அவசரகால நிலைமை மாறிய பின்னர் ஒரு நேரப் பாடசாலையாக இயங்கும் முறை பிள்ளைகளுக்கு ஏற்றதாயின் இம்முறை நீடிக்கப்படக்கூடும்.

## ஐயாறன் எழுதுவது

முறிகண்டி ஸ்டேஷனில் தண்ணீர் கொடுத்தது பற்றி நேற்று எழுதினேனல்லவா? சிலர் 'நல்ல புண்ணியம்' என்று பாராட்டினர்கள். வேறு சிலர் 'கள்ளு கள்ளு' என்று கேலி செய்தனர்.

நல்ல காரியம் செய்தாலும் கேலி செய்து காலை இழுத்து விட சிலர் காத்திருக்கிருர்களல்லவா? அவர்களைக் கண்டதும், சற்றே ஆத்திரமடைந்தார் என்னுடன் வந்த நண்பர் காந்தி வேலாயுதபிள்ளை. அவர்களைப் பொருட்படுத்த வேண்டாமென்றும், பாராட்டுதலும் கேலியும் ஒன்றுக்கொன்று சமன் செய்து கொள்ள விட்டுவிடலாமென்றும் கூறினேன்.

அது போகட்டும். இவ்வளவு அருமையான தண்ணீருள்ள அந்த இடத்தில் காட்டை அழித்து பல குடும்பங்கள் குடியேறி வசிக்கலாம். உணவு உற்பத்தியைப் பெருக்கலாம். வடமாகாணத்தில் எவ்வளவோ இயற்கை வசதிகள் உள்ளன. அபிவிருத்திக்கு அதிக இடமுண்டென்பதை நேரில் உணர்ந்தேன்.

தோட்டப் பகுதிகளிலேயுள்ள தமிழ்க் குடும்பங்கள் சிலவற்றை இவ்வித இடங்களில் குடியேற்ற உதவினல் அந்த இடம் ஒரு சில வருடங்களில் எவ்வளவோ மாறி பயனளிக்கும். தோட்டத்தில் வேலையற்ருேர் பிரச்சினையும் தீரும். ஆனல் அந்த உத்தம உழைப்பாளர்களை நாடுகடத்திவிடவல்லவோ சிலர் திட்டம் போடுகிருர்கள்!

* * *

என்னுடன் வந்த வேலாயுத பிள்ளைக்கு இந்தியாவிலிருந்து ஓர் அவசர அழைப்புவந்திருந்தது. வடஇந்தியாவிலேராஜஸ்தானில் அகில இந்திய வெல்லத்தொழில் மகாநாடு நடப்பதாயும் இலங்கையிலே பனை வெல்ல உற்பத்தியில் சிரத்தை கொண்ட வேலாயுதபிள்ளையை அம்மகாநாட்டில் பங்குகொள்ளுமாறும், போகவர ரயிலுக்கு முதல்வகுப்பு கட்டணமும், எல்லாச்செலவும் கொடுப்பதாகவும் கடிதத்தில் எழுதியிருந்தனர். இலங்கைக்குஇது நல்லதோர் வாய்ப்பென்று கருதினேன்.

பாஸ்போர்ட் புதுப்பிப்பதற்காக அவர் கொழும்புக்கு வந்தார். மறுநாளே புதுபாஸ்போர்டும் எடுத்துவிட்டார். ஆனல் பின்னர் விஸா வாங்க வேண்டுமல்லவா? இந்திய ஹைகமிஷனுக்குச்சென்று, தமக்கு வந்துள்ள அழைப்பைக் காட்டி, விஸாவுக்கு மனுச்செய்தார். ஆனல் டில்லிக்கு எழுதிக் கேட்டே விஸாகொடுக்கவேண்டுமென்றும் இதற்கு இரண்டொரு வாரம் தவக்கமேற்படுமென்றும் கூறிவிட்டனராம் அங்குள்ள அதிகாரிகள்!

ஒரு சில நிமிடங்களில் விஸா கொடுக்கும் இந்திய ஹைகமிஷன் ஏன் இப்படிக் கூறியது தெரியுமா? இந்தியாவிலே நடைபெறும் ஏதாவது அரசியல் பொருளாதார சமூக நாடுகளுக்குச் செல்வதாயின், டில்லி அரசாங்கத்தின் முன் அனுமதிபெற்றுல்தான் விஸா வழங்கலாமென்பது, 'சிவப்பு நாடா' உத்தரவு! அதன்படி அப்படிச் சொல்லிவிட்டனர்! பிள்ளையும் போகமுடியவில்லை!

* * *

முன் ஒருசமயம் பெங்களூரில் நடந்த காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்துக்குச் செல்லுவதாகக் கூறி நானும் விஸா கேட்டிருந்தேன். அங்கிருந்த நண்பர் ஒருவாரமாகுமென்ருர். புரியவில்லை. பின்னர் நிலைமையை விளக்கி, பழைய விஸா மனுவைக் கிழித்துவிட்டு இந்தியாவுக்கு யாத்திரை செல்லுவதாகக் காரணம்கூறுமாறு, யோசனை சொன்னர்.

(6-ம் பக்கம் பார்க்க)

# கென்னடி-குருஷேவ் சந்திப்புக்கு ஏற்பாடுகள் ஜரூர்

## சந்திப்பினல் பயனுண்டு என கென்னடி நம்பிக்கை

வாஷிங்டன், மே 23

சோவியத் பிரதமர் குருஷேவை அடுத்தமாதம் மூன்றும், நான்காம் திகதிகளில் வியன்னவில் சந்திப்பதற்கு ஆவலுடனும் மிகுந்த நம்பிக்கையுடனும் இருப்பதாக அமெரிக்க ஜனதிபதி கென்னடி நேற்று சோவியத் பத்திராதிபர்கள் கோஷ்டியொன்றிடம் தெரிவித்தார்.

சோவியத் பத்திராதிபர்கள் கோஷ்டியொன்று தம்மைச் சந்திக்க தமது மாளிகைக்கு வந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதும் அவர்களை உடனடியாகத் தமது காரியாலயத்துக்கு அழைத்துச் சந்தித்துப் பேசினர்.

சோவியத் பிரதமரும் தாமும் சந்தித்துப் பேசுவதனல் அமெரிக்காவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் மேலான உறவு ஏற்படுமென்று தாம் நம்புவதாக திரு. கென்னடி தெரிவித்தார்.

தங்கள் சந்திப்பு அமெரிக்காவும் சோவியத் யூனியனும் ஒன்றையொன்று நன்கு புரிந்துகொள்ள வாய்ப்பளிக்குமென்று திரு. கென்னடி நம்பிக்கை தெரிவித்தார்.

"நாம் இப்பொழுது சிரமமான காலத்தைக் கடந்துகொண்டிருக்கிறேம். எந்தவழியிலும் நல்லதொரு சூழ்நிலையை ஏற்படுத்தவேண்டியது நமது கடமை" என்று திரு. கென்னடி கூறினர்.

"சோவியத் பிரதமர் குருஷேவும் அமெரிக்க அதிபர் கென்னடியும் சந்திப்பதன்மூலம் எதுவித முடிவும் ஏற்படாவிட்டாலும் இருவரும் சந்தித்து கருத்துப் பரிமாறிக்கொண்டாலே அதனல் பயனுண்டு" என்று சோவியத் துணைப் பிரதம மந்திரி திரு. மிக்கோயன் நேற்றுக் கூறினர்.

### சோவியத் கோஷ்டி பயணம்

சோவியத் பிரதமரும் அமெரிக்க அதிபரும் அடுத்தவாரம் சந்தித்துப் பேசுவதற்கான ஒழுங்குகளைக் கவனிக்கவும் பந்தோபஸ்து ஏற்பாடுகளைச் செய்யவும் சோவியத் கோஷ்டியொன்று நேற்று வியன்னவுக்கு விமானத்தில் புறப்பட்டுச் சென்றது.

அமெரிக்க அரசாங்க பத்திரிகை அதிகாரியின் தலைமையில் அமெரிக்க கோஷ்டியொன்று விரைவில் வியன்னவுக்குச் செல்லும்.

---

## ஆப்கானிஸ்தான் எல்லையில் பாக். குண்டு வீச்சு

காபூல், மே 23

ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் நேற்று இரண்டாவதுநாளாக பாகிஸ்தான் விமானப்படையினர் குண்டு வீசியதாக ஆப்கானிஸ்தான் அறிவித்தது.

பாகிஸ்தான் எல்லையில் ஆப்கானிஸ்தான் தனது துருப்புக்களைக் குவிப்பதாக பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்சாட்டை ஆப்கானிஸ்தான் மறுத்தது.

ஆப்கானிஸ்தான் அமைதியையே நாடுகிறது. படைகளைக் குவிப்பதன் மூலமோ யுத்தம் செய்வதன் மூலமோ எந்தப் பிரச்னைக்கும் தீர்வுகாணமுடியுமென்று ஆப்கானிஸ்தான் நம்பவில்லையென்று ஆப்கானிஸ்தான் கூறியது.

---

## மரப்பட்டையில் எழுதப்பட்ட பிரதிகள்

காஷ்மீர், மே 23

சுமார் ஆயிரத்து ஐநூறு வருடங்களுக்கு முந்திய 'சாரதா' என்ற மரப்பட்டையில் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் காஷ்மீரில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

சைவசித்தாந்தம், பௌத்தம், ஜோதிடம், வைத்தியம் முதலிய பல அரிய விஷயங்களைக் கொண்டுள்ள இப்பிரதிகளுள் காஷ்மீர் வரலாற்றின் அரிய சரித்திரமும் அடங்கியுள்ளனவாம்.

---

## பூட்டிய கதவு திறக்கப்பட்டது

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி தச்சன்தோப்பு விநாயகர் ஆலயம் சம்பந்தமாக இருசாராருக்கிடையே பல மாதங்களாக ஆதிக்கம்பற்றிய வழக்கு பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்தில் விசாரணை நடந்தபின், கோவில் ஊர்ச் சொத்து என்றும் தனிப்பட்ட எவருக்கும் அதில் எப்பகுதியிலும் உரிமையில்லை என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது. ஆனல் கடந்தசனிக்கிழமை ஒருசாரார் கோவிலைச் சங்கிலியால் பூட்டி சுமார் 4 மணிநேரம் மற்றவர்களைத் தடுத்துவைத்தனர். இதன்பின் பருத்தித்துறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர், கிராமவிதானை ஆகியோர் தலையிட்டுக் கோவிலைத் திறந்து வைத்தனர்.

---

## "ஆசிரியர் அல்லாதோரையும் தெரிவு செய்க"

உடுப்பிட்டி, செவ்வாய்

"சமீபத்தில் வெளியான ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி முடிவுகளின்படி சேவையிலுள்ள ஆசிரியரே தெரிவுசெய்யப்பட்டுள்ளனரன்றி, ஆசிரியரல்லாதோர் தெரிவுசெய்யப்படவில்லை. திறமை அடிப்படையில் பரீட்சார்த்திகளைத் தெரிவுசெய்வதே கல்விக்கோட்பாடுகளுக்கும், ஜனநாயகத்திற்கும்பொருத்தமானது. மேலும் பெருகிவரும் வேலையில்லாத்திண்டாட்டத்தைக் குறைப்பதற்கும் அது ஒரு சிறந்த வழியாகும்."

இவ்வாறு நேற்றுமுன்தினம் ஐம்பதுபேரைக்கொண்ட இளைஞர்கோஷ்டி ஒன்று உடுப்பிட்டி எம். பி. சிவசிதம்பரத்திடம் ஒரு மகஜரைச் சமர்ப்பித்தது ஆவன செய்வதாக திரு. சிவசிதம்பரம் கூறினர்.

---

## 'மதம், மொழி காரணமாக மனக்கசப்பு கூடாது'

### லால்பகதூர் சாஸ்திரி புத்திமதி

புதுடில்லி, மே 23

மதம், மொழி காரணமாக மக்களிடையே மனக்கசப்பைத் தோற்றுவிக்கலாகாது என்று இந்திய உள்நாட்டுமந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரி நாட்டு மக்களைக் குறிப்பாக அஸ்ஸாம் மக்களைக் கேட்டுக்கொண்டார்.

புதுடில்லி நகரசபை அளித்த வரவேற்பு உபசார வைபவம் ஒன்றில் நேற்றுக் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. சாஸ்திரி மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

"நாட்டின் ஒழுங்கையும் அமைதியையும் குலைக்கும் முயற்சிகளில் மக்கள் இறங்கக்கூடாது. ஒழுங்கைக் குலைப்பதன்மூலம் எதையும் நிறைவேற்றிக்கொள்ளலாம் என்று மக்கள் கருதக்கூடாது. நாட்டின் ஒழுங்கைக் குலைக்கும் முயற்சிகளில் மக்கள் ஈடுபட்டால் அரசாங்கம் அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்காது" என்று திரு. லால் பகதூர்சாஸ்திரி கூறினர்.

"அரசாங்கத்தின் செயல்களில் தவறு இருக்கலாம். அத்தவறுகளைத் திருத்துவதற்கு உரியமுறையில் அரசாங்கத்துக்கு எடுத்துக்காட்டவேண்டுமே தவிர நாட்டின் ஒழுங்கைக் குலைக்கக்கூடிய இயக்கங்களை உருவாக்கி பொலிசார் சுடும்படியாக அல்லது தடியடிப்பிரயோகம் செய்யக்கூடியதாக ஒரு நிலைமையைத் தோற்றுவிக்கக்கூடாது" என்று திரு. சாஸ்திரி கூறினர்.

### மாண்டவர்களின் அஸ்தி கரைக்கப்பட்டது

அஸ்ஸாம் ராஜ்ய மொழியாக வங்காள மொழியையும் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கோரி சென்றவெள்ளிக்கிழமை கச்சார் ஜில்லாவில் தோன்றிய கலகத்தில் சில்சார் என்ற இடத்தில் பொலிசார் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் இதுவரை பதினெருபேர் உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிப்பிரயோகம் செய்யப்பட்ட பொழுது ஒரு குழந்தையும் தாயும் உட்பட ஏழுபேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். மற்றும் நால்வர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் மரணமானர்கள்.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கச்சார் ஜில்லாவில் ஏழு நாட்களுக்கு ஊரடங்குச்சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனல் குறிப்பிட்ட சில இடங்களில் சிலமணிநேரம் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டது. துப்பாக்கிப்பிரயோகத்தில் காலமானவர்களின் தகனக்கிரியைக்காக ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்டதுடன் ஒரு குறிப்பிட்ட பாதை வழியாக பிரேதங்களை ஊர்வலமாக மயானத்துக்கு எடுத்துச்செல்லவும் அனுமதிக்கப்பட்டது.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டவர்களின் அஸ்தி கரைப்பு வைபவம் நேற்று நடைபெற்றது. இந்த ஊர்வலத்திலும் வைபவத்திலும் சுமார் 40,000 மக்கள் கலந்துகொண்டனர்.

கரிம்கஞ்ச், கச்சார், சில்சார் ஆகிய இடங்களில் இப்பொழுது அமைதி நிலவுகிறது. அரசாங்க காரியாலயங்களிலும் இதர காரியாலயங்களிலும் வேலை நடைபெறவில்லை. துருப்புகள் ரோந்துசுற்றி வருகின்றன.

இப்பகுதிகளில் அமைதி ஏற்பட்டு மாமூல் நிலைமை திரும்பியதும் சில்சார் துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக விசாரணை நடைபெறும் என்று சில்சார் கமிஷனர் அறிவித்தார்.

---

## பந்த் மகன் தேர்தலில் தோல்வி

பம்பாய், மே 23

உத்தர பிரதேசத்தில் சுல்தான்பூர் என்ற தொகுதியில் நடைபெற்ற உபதேர்தல் ஒன்றில் முன்னள் இந்திய உள்நாட்டு மந்திரி பண்டித கோவிந்த வல்லபந்த்தின் மகன் திரு. கே. ஸி. பந்த் தோல்வியடைந்தார்.

கோவிந்தமாளவியாவின் மறைவினல் காலியான இந்த ஸ்தானத்துக்கு காங்கிரஸ் அபேட்சகராகப் போட்டியிட்ட கே. ஸி. பந்த் 1129 வாக்குகளால் தோல்வியடைந்தார்.

---

## இலங்கையின் புனிதத்தன்மை

### இன்று மாசுபட்டுவிட்டது

—பிரதம மந்திரி

அனுராதபுரம், செவ்வாய்

"இலங்கை வங்கியோ அன்றேல் வேறு எந்த வர்த்தக வங்கியோ இங்குள்ள கிராம மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கடன் தொல்லையை நீக்கத்தக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மக்கள்வங்கியை ஸ்தாபிப்பதன் மூலமே கிராம மக்களின் பொருளாதார நிலையைச் சீர்செய்யலாம்."

இவ்வாறு கூட்டுறவுமாகாண வங்கியைத் திறந்துவைத்துப் பேசுகையில் பிரதம மந்திரி திருமதி பண்டாரநாயக்கா இங்கு கூறினர்.

அவர் மேலும் பேசியதாவது: "ராஜரட்டைதான் பௌத்த மதத்தின் பிறப்பிடம். இந்தப் புனித இடத்தில் கள்ளச்சாராயம் வடிப்பதுவும் கொலைக் குற்றம் நடப்பதுவும் புனிதத் தன்மையை மாசுபடுத்துவதாக அமைந்துள்ளன. முன்னர் இங்கு வாழ்ந்த மக்களின் உயர்ந்த வாழ்க்கை இலங்கைக்கு "தர்மதுவீபம்" என்னும் பெயரைப் பெற்றுக் கொடுத்தது. ஆனல் இன்றே இத்தீவு கொலைக்களமாக மாற்றப்பட்டுவிட்டது. மதுவும், பண ஆசை பதவி ஆசைகளும், வெறுப்பு, பொறுமை ஆகியனவும் சேர்ந்து இந்த இழிநிலையை உருவாக்கியுள்ளது."

---

## கி. ச. அங்கத்தவர் ராஜினமா

காத்தான்குடி, திங்கள்

மண்முனை வடக்கு தென்பகுதிக் கிராமச்சங்கத்தின் 1-ம் வட்டார அங்கத்தவர் திரு. சி. பூபாலரத்னம் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளார். இதற்கான இடைததேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல்செய்யும் திகதி அறிவிக்கப்பட்டிருந்தும், தற்போது இந்த இடைத்தேர்தல் நடைபெருதென அறிவிக்கப்பட்டுள்ளது.

---

## எழுத்தாளர்களுக்கு

"ஈழநாடு" தினப்பத்திரிகையில் வெளியிடுவதற்கு சமூக, பொருளாதார சம்பந்தமான கட்டுரைகளை வரவேற்கின்றேம். கட்டுரைகள் மூன்று கலத்துக்கு மேற்படாதிருத்தல் நலம். தாளில் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதப்பட்டிருத்தல்வேண்டும். வெளியாகாத கட்டுரைகளைத் திருப்பிப் பெறவிரும்புவோர் உரிய தபால் முத்திரை சேர்த்தனுப்புதல்வேண்டும்.

மொணரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM TRADE MARK

மொணரு அன் ரோஸ் பப்படங்கள் மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM REGD. TRADE MARK No 18255 A. M. BUHARI, 255, 5th CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.

## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.


# வர்த்தக ஸ்தாபனங்களுக்கு மேலதிகக் கட்டணம்

கொழும்பு, செவ்வாய்

சென்ற மாதம் அமுலுக்கு வந்த வியாபாரப்பதிவு மேலதிகக் கட்டணச் சட்டவிதிப்படி இலங்கை வர்த்தக ஸ்தாபனங்கள் 250 ரூபாயும் இலங்கையரல்லாதவர் நடாத்தும் வர்த்தக ஸ்தாபனங்கள் 1000 ரூபாயும் செலுத்த வேண்டுமென விதிக்கப்பட்டது. இந்த மேலதிகக் கட்டணம் புதன்கிழமைக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும்.

1960 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் திகதி பதிவுசெய்யப்பட்ட சகல வியாபார ஸ்தாபனங்களும் இந்த மேலதிகக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும்.

இத்திகதிக்குப் பின்ன பதிவு செய்த வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் இந்த விதியை அமுல் நடத்துவதற்கான புதுச் சட்டத்தைக் கொண்டுவர அரசாங்கம் ஆலோசனை செய்துள்ளது.

ஒரு வர்த்தக ஸ்தாபனத்தின் கிளைகள் அதே ஸ்தாபனத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தால் அவை இந்த மேலதிக வரியைச் செலுத்தத் தேவையில்லையெனத் தெரிய வருகிறது.

## விதானையார் வீட்டில் களவு

உடுப்பிட்டி, திங்கள்

கரவெட்டி மேற்கு கிராம விதானை திரு. கே. பொன்னையாவின் வீட்டில் வெள்ளிக்கிழமை இரவு இருசோடி காப்புக்கள் களவாடப்பட்டுவிட்டன. காப்புடனை அணிந்து கொண்டு விதானையாரின் மகள் படுத்திருந்தபோதே களவு நடைபெற்றதாசத் தெரிகிறது. புலன்விசாரணை நடைபெறுகிறது.


## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

வைத்தியர் பரிபூரணாநந்தர்,
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.


அலபாமாவில்

## நிறவெறியர்களை அடக்க அதிக பொலிஸ்

வாஷிங்டன், மே 23

அமெரிக்காவிலே அலபாமாவின் தலைநகரான மாண்ட்கோமரியில் தோன்றியுள்ள நிறவெறிக் கலகத்தை அடக்குவதற்காக அங்கு அனுப்பப்பட்ட அமெரிக்க சமஷ்டிப் பொலிஸ் வீரர்கள் 400 பேர்களுக்குத் துணையாக மேலும் 200 பொலிசார் இன்று அனுப்பப்பட்டனர்.

## நகரசுத்தித் தொழிலாளர்

### ஹெளராவில் வேலை நிறுத்தம்

ஹெளரா, மே 23

ஹெளரா முனிசிபல் சபையைச் சேர்ந்த 300 நகரசுத்தித் தொழிலாளர் நேற்றுதடையுத்தரவை மீறி ஊர்வலமாகச் சென்று ஆர்ப்பாட்டம் செய்தனர். இவர்களைக் கலைப்பதற்கு பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்ய நேரிட்டது.

சம்பள உயர்வு கோரி வேலை நிறுத்தம் செய்யும் இத்தொழிலாளர் ஹெளரா பொலிஸ் நிலையத்தைத் தாக்க முயற்சி செய்தனர். இது சம்பந்தமாக 44 பேர் கைது செய்யப்பட்டனர்.


## றேடியோ

உங்கள் றேடியோவின் தொந்தரவுகளைச் சுலபமான முறையில் நீக்கிப் புதியது போல் திருத்தித் தருவதற்கு, றேடியோ எஞ்ஜினியேர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

## தேவை

அலுமினிய பாத்திர வேலையில் அனுபவம் வாய்ந்த 'ஸ்பின்னேர்ஸ்' 'பொலிஸேர்ஸ்' (Spinners & Polishers) யாழ்ப்பாணத்தில் உள்ள யாழ் அலுமினிய தொழிற்சாலைக்குத் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பங்கள் 31-5-61 க்கு முதல் அனுப்பவும்.

மனேஜர்,
யாழ் மெட்டல் இன்டஸ்றீஸ்,
250, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

## பதிற்றுப்பத்து

ஆராய்ச்சியுரை

உரையாசிரியர்:
பண்டிதர் சு. அருளம்பலவனார்

இராகவையங்கார் முதலிய பேரறிஞர்களின் மதிப்புரை கொண்டது.

2,3,4,5-ம் பத்துக்களின் உரை
424 பக்கம் விலை ரூ. 5-00

2-ம் பத்து உரை
216 பக்கம் விலை ரூ. 2-00

கிடைக்குமிடம்:
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
யாழ்ப்பாணம்
சண்முகநாதன் புத்தகசாலை
யாழ்ப்பாணம்

## தேவை

எமது வாசனைத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு 15 வயதுக்கும் 20வயதுக்கும் உட்பட்ட ஆண்கள் தேவை. தொடர்புகள் கடித மூலம்.

அதிபர்: M. S. K. சாமி
துன்னாலை வடக்கு,
கரவெட்டி.


## "உலக நிலைமை சீர்திருந்தும்"

### மேனன் கருத்து

புதுடில்லி, மே 23

"உலக நிலைமை பொதுவாகச் சீர்திருந்தியுள்ளது" என்று இந்திய பாதுகாப்பு மந்திரி திரு. வி. கே. மேனன் நேற்று புதுடில்லி வந்து சேர்ந்த போது பாலம் விமான நிலையத்தில் ஒரு நிருபரிடம் கூறினர். லாவோஸ் நிலைமைக்கு நல்லதொரு தீர்வு காணும் வாய்ப்பு ஜெனிவா மகாநாட்டில் ஏற்பட்டுள்ளதென்று திரு. மேனன் கூறினர்.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கை தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்—இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்"பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னுன விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட நிறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனால்! "மில்க்மெயிட்"பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்

ஜெனிவா மகாநாடு

# லாவோஸ் எல்லைகளில்

## காவல் நிலையங்களை அமைக்க யோசனை

### பிரிவினை யோசனைக்கு பர்மா எதிர்ப்பு

ஜெனிவா, மே 23

லாவோஸ் சம்பந்தமாக ஜெனிவாவில் ஆரம்பமான 14 நாடுகளைக்கொண்ட சர்வதேசக் கமிஷனின் மகாநாடு இரண்டு நாள் இடைவேளைக்குப் பின் நேற்று மீண்டும் கூடியது.

இந்த மகாநாட்டில் இடதுசாரி பதட்லாவோஸ் பிரதிநிதிகள் கலந்து கொள்ளும் வரை தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லையென்று வலதுசாரியினர் அறிவித்து மகாநாட்டைத் தொடர்ந்து பகிஷ்கரித்து வருகின்றனர்.

லாவோஸில் ஐக்கிய அரசாங்கம் ஒன்று அமைப்பது பற்றித் தங்களுக்குள்ளேயே பேச்சுவார்த்தை நடத்திக் கருத்துவேற்றுமையை நீக்குவதற்கு ஜெனிவா வந்துசேருமாறு லாவோஸ் வலதுசாரிப் பிரதமர் பூன்ஊம், இடதுசாரிப் பிரதமர், நடுநிலைமைப் பிரதமர் இளவரசர் சுவன்னபூமா ஆகியோரைக் கம்போடியாப் பிரதமர் இளவரசர் நரோடம் சிகானுக் கேட்டுக்கொண்டுள்ளார்.

கம்போடியாவின் வெளிவிவகார மந்திரி நேற்று ஜெனிவா மகாநாட்டில் பேசுகையில் லாவோஸ் பிரச்னைக்கு ஒரு பரிகாரமாக பிரிட்டன் சமர்ப்பித்த நான்கு அம்சத் திட்டத்தை ஆதரித்தார்.

லாவோஸ் எல்லைகளில் காவல் நிலையங்கள் அமைக்க வேண்டுமென்றும் லாவோஸுக்கு இராணுவ சாதனங்கள் வருவதை இக்காவல் நிலையங்கள் தடைசெய்ய முடியுமென்றும் இந்நிலையங்களில் இரவும் பகலும் காவல் புரியவேண்டுமென்றும் இந்த அதிகாரம் லாவோஸ் மேற்பார்வைக் கமிஷனுக்கு அளிக்கப்படவேண்டுமென்றும் கம்போடிய வெளிவிவகார மந்திரி மகாநாட்டில் கூறினர்.

மகாநாட்டில் முட்டுக்கட்டை ஏற்படாதவாறு நிலைமையைச் சமாளிக்க பர்மாவும் கம்போடியாவும் முயற்சிசெய்து வருவதாக அறியப்படுகிறது.

லாவோஸ் நடுநிலைமை நாடாகப் பிரகடனப்படுத்தப்பட்டு லாவோஸுக்கு அளிக்கப்படும் எந்தவித உதவியும் சர்வதேச ஸ்தாபனம் மூலமாக அளிக்கப்படவேண்டுமென்ற யோசனையை கம்போடிய வெளிவிவகார மந்திரியும் ஆதரித்துப் பேசினர்.

**கம்யூனிஸ்டுகள் ஒப்புக்கொள்ளவில்லை**

எந்த சர்வதேச ஸ்தாபனத்தின் மூலமாகவும்தான் லாவோஸுக்கு உதவியளிக்கப்படவேண்டுமென்ற யோசனையைக் கம்யூனிஸ்ட் நாடுகள் ஒப்புக்கொள்ளவில்லையென்று போலந்துப் பிரதிநிதி மகாநாட்டில் தெளிவுபடுத்தினர்.

லாவோசைப் பிரிவினைசெய்யும் யோசனையை பர்மா பலமாக எதிர்ப்பதாக பர்மாப் பிரதிநிதி கூறினர்.

லாவோஸை ஒரு நடுநிலைமை நாடாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற யோசனையை மகாநாடு பொதுவாக ஒப்புக்கொண்டிருப்பதால், லாவோஸுக்கான நடுநிலைமைக்கொள்கை அறிக்கையை உருவாக்க ஆய்வுக்குழுக்களை மகாநாடு அடுத்தவாரம் நிறுவக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**ரயில் நேரங்கள்**

| யாழ்ப்பாணம் | கோட்டை |
|---|---|
| காலை 7-30 | 6-55 |
| பி. ப. 2-25 | 1-30 |
| மாலை 5-40 | 5-55 |

## சிரிப்பால் முன்னேறிய மனிதன்

காரைதீவு, செவ்வாய்

"மிருகங்கள் ஆதிகாலத்திலே வாழ்ந்தது போன்றுதான் இன்றும் வாழ்கின்றன. அவைகளுக்குச் சிரிக்கத் தெரியாது. சிரிக்கத் தெரிந்த மனிதன் முன்னேறிவிட்டான். இன்றும் நம்மிடையே சிரிக்க விருப்பம் அற்றோர் அநேகர் உளர். சிரிக்காவிட்டால் மனிதன் முன்னேற முடியாது." இவ்வாறு கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலை முத்தமிழ்க் கலாமன்றத்தில் மாஸ்டர் சிவலிங்கம் குறிப்பிட்டார்.

ஆசிரியர் திரு. சீ. குணரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மாஸ்டர் சிவலிங்கம்ஹாஸ்யவிருந்தளித்தார். தமிழ்நாட்டுப் பிரமுகர்களான அண்ணாத்துரை, ஈ. வெ. ரா. பெரியார், மு. கருணாநிதி, காமராஜர், நடிகவேள் ராதா, ஈரோடு சின்னச்சாமி ஆகியோர் அரசியல் கூட்டங்களில் பேசுவது போன்றெல்லாம் அவர் பேசிக் காட்டினர்.

## லுமும்பா கொலை விசாரணை

காங்கோ, மே 23

காங்கோவில் பிரதமர் லுமும்பாவின் கொலை சம்பந்தமாக விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட விசாரணைச்சபை திரு. லுமும்பா கொலைசெய்யப்பட்ட போதிருந்த மக்களின் வாக்குமூலத்தையும் ஐ. நா. காரியாலய அங்கத்தவர்களின் வாக்குமூலத்தையும் பெற்று வருகிறது.

## வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்றச்சங்கம்

### கொழும்பு கிளையின் தீர்மானம்

கொழும்பு, மே 23

வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்றச் சங்கத்தின் கொழும்பு கிளையின் பொதுக்குழுக் கூட்டம் சங்க அலுவலகத்தில் தலைவர் திரு. செ. பொன்னையா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சொல்லின் செல்வர் திரு. ரா. பி. சேதுப்பிள்ளை மறைவு குறித்து இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. கீழ்க்கண்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

1. வேலணையிலும் அதையடுத்த மற்றும் கிராமங்களிலும் உள்ள வீதிகளில் இ. போ. ச. பஸ் வண்டிகள் நிற்குமிடங்களில் "பஸ் நிற்குமிடம்" என்ற அறிவித்தல் கம்பத்தை நாட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேலணை கிராமச் சங்கத்தையும் மற்றும் கிராமச் சங்கங்களையும் இச்சங்கம் வேண்டிக்கொள்ளுகின்றது.

2. பாடசாலைகளின் பணிஸ்-பால் விநியோகம்பற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள குழுவினர் சமர்ப்பித்த சிபார்சுகளை ஏற்று விரைவில் அமுல் நடத்துமாறு கல்வி இலாகாவை இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது.

## முல்லைத்தீவில் கள்ள நோட்டு

### பொலிசார் புலன்விசாரணை

முள்ளியவளை, செவ்வாய்

முல்லைத்தீவு முதலாம் இலக்கக் கள்ளுத் தவறணைக் குத்தகைக்காரரான திரு. ஹென்றி ததேசு என்பவர், தவறணைக் குத்தகைப் பணத்தை முல்லைத்தீவுத் தபாற் கந்தோரிலுள்ள திறைசேரியிற் கட்டியபோது, அவர் கொடுத்த பணத்திலே, ஒரே இலக்கமுடைய 10 ரூபாய் நோட்டுக்கள் நான்கு இருந்ததைத் தபாற் கந்தோர் ஊழியரான திரு. பொ. இராமச்சந்திரன் கண்டு பொலிசாருக்கு அறிவித்தார்.

ஸ்தலத்துக்கு வந்து விசாரணை நடத்திய முல்லைத்தீவுப் பொலிசார், திரு. ததேசுவின் வீட்டைச் சோதனை செய்தபோது, அதே இலக்கமுடைய 10 ரூபாய் நோட்டுக்கள் மேலும் மூன்று இருப்பதைக் கண்டுபிடித்தனர். பொலிசார் மேலும் புலன்விசாரணை நடத்துகின்றனர்.

## சுளிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணியசுவாமி கோவில் உற்சவம்

சுளிபுரம், செவ்வாய்

சுளிபுரம் பறுளாய் சிவசுப்பிரமணிய சுவாமிகோவில் வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகியுள்ளது.

29-5-61 திங்கட்கிழமை தேர் திருவிழாவும், 30-5-61 செவ்வாய்க்கிழமை திருவடி நிலையில் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். நாட்டில் அவசரகால நிலைமை இருப்பதால் பகல் வேளையிலே இராத் திருவிழா முடிவடைகின்றது.

## வானொலி நிகழ்ச்சிகள்

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7, பகல் 12-45, மாலை 6, இரவு 9)

**புதன் 24-5-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவ நற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 8-00 புல்லாங்குழல், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இளைஞர் மன்றம், 5-45 திரை இசை, 6-15 கிராம சஞ்சிகை, 6-45 வீணை.

இரவு 7-00 நேயர் விருப்பம் 7-30 உங்கள் பிரச்சினை, 8-00 பூமணி இராஜரத்தினம்—பாட்டு, 8-45 இஸ்லாமிநிகழ்ச்சி, 10-00 கானமஞ்சரி.

**திருச்சி**

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7–15)

காலை 7-00 இசைக்கதிர், 7-30 டி. பி. ஏ. முத்துக்குமாரஸ்வாமி—வீணை.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 2–10 டி. பி. ஏ. முத்துக்குமாரஸ்வாமி — வீணை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்) 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 சென்னை அஞ்சல், 8-00 சதுக்க பூதம்—நாடகம், 9–15 நல்லுரை, 9-20 இசைக்கோவை, 9-50 இசை மாலை.

மன்னாரில்

## மசனட் ஆண்டவர் நூற்றாண்டுநினைவுவிழா

மன்னார், செவ்வாய்

மார்சேல்ஸ் நகர மேற்றிராணியார் அதி. வண. ஈயூஜின் டீ மசனட் ஆண்டவர் நூற்றாண்டு நினைவுவிழாக் கொண்டாடுமுகமாக திங்கட்கிழமை சென். செபஸ்தியார் ஆலயத்தில் வண. பாலசுந்தரம் சுவாமியாரல் ஒரு பாடற்பூசை நிறைவேற்றப்பட்டது.

அன்று பின்னேரம் அர்ச் தேவமாதா கோவிலில் தேவ ஆசீர்வாதம் நிறைவேற்றப்பட்டது. சென். சேவியர்ஸ் கல்லூரியில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் மசனட் ஆண்டவரின் அருமைபெருமைகளைப் பற்றி செல்வி பிலோமினு ஞெசஞரு ஆனந்தம் செபஸ்தியன், செல்வன் கொலின் இம்மனுவேல், செல்வி யோசேப்பின் மனுவேற்பிள்ளை திரு. எஸ். பி. எப். ஞெட்றிக்கோ, திரு. ஏ. எஸ். பி. இரத்தினசிங்கம் வண. சகோதரர் ஹில்லரி யோசப் ஆகியோர் பேசினர்.

மசனட் ஆண்டவரின் வாழ்க்கையைப்பற்றிய நாடகமொன்றை சென். சேவியர் கல்லூரி மாணவர்கள் நடித்துக்காட்டினர்.

# உலக தொழில்களுக்கான ஆராய்ச்சி நிலையம்

## தலைநகர் அமைக்கவும் திட்டமிட்டு உதவுகிறது

பிராங்பர்ட், (டாட்)

இங்குள்ள "பாடெல்லே" ஸ்தாபனம் எந்தத் தொழிலிலும் ஆராய்ச்சி நடத்தும் வசதிகளைப்பெற்றதாகும். இதை ஏற்படுத்திய பாடெல்லே என்பவரைப் பின்பற்றி இந்த ஸ்தாபனம் இப்பெயரைப் பெற்றிருக்கிறது. உலகப்பிரசித்திபெற்ற இந்த ஸ்தாபனத்தில் 567 விஞ்ஞானிகளும், தொழில் நுணுக்க நிபுணாகளும் பணியர்ற்றுகின்றனர்.

இக்கழகக் கட்டிடத்திற்குள் ஒருதரம் சுற்றிவந்தால் இத்தகைய சர்வதேச ஆராய்ச்சி ஸ்தாபனம் வேறெங்குமே இருக்கமுடியாது என்பதை உணரலாம்.

அநேக வருஷங்களாக இக்கழகம் தனிப்பட்ட தொழில் ஸ்தாபனங்களுக்காகவும் உலக நாடுகளின் அரசாங்கத்திற்காகவும் சில துறைகளில் ஆராய்ச்சிகளை நடத்திவருகிறது. ஆராய்ச்சிகளை அவர்களே மேற்கொண்டால் ஏராளசெலவும் நேரமும் விரயமாவதால் இப்பணியை அவர்கள் இந்த ஸ்தாபனத்திடம் ஒப்படைத்துவிடுகின்றனர்.

பெரும்பாலாக கேட்கப்படும் ஆலோசனைகள் தொழில் நுணுக்கப் பிரச்சினைகளைப்பற்றியதாகவே இருக்கின்றன. எதியோப்பியாவிற்கு புதுத் தலைநகர் ஒன்றை தாஞ ஏரிக்கரையில் அமைக்க இந்த ஸ்தாபனம் ஆலோசனைகள் கூறி ஒத்துழைத்தது.

ஆராய்ச்சி, பரிசோதனை, திட்டவேலை இவைபற்றி எல்லாம் வேலை நடைபெற ஒன்பது இலாகாக்கள் இருந்துவருகின்றன. இங்கு பணிபுரியும் நிபுணர்கள் கையாள்வதற்காக நவீன சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மின்விசைப் பொறியியல், மின்விசைத் தொழில்கள், நார் சம்பந்தப்பட்ட தொழில்கள், உயிரியல் ரஸாயனம், பொது பொறியியல், உலோகத்தொழில் ஆகிய துறைகளிலெல்லாம் இங்கு ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றன ஒவ்வொரு இலாகாவிலும் விசேஷ ஆராய்ச்சிகளுக்காகப் பல பிரிவுகள் உள்ளன. 1958 முதல் வான வெளியில் ராக்கெட் செலுத்துவது, விமானம் ஓட்டுவது ஆகிய துறைகளிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டுவருகின்றன.

உலகப் புகழ்பெற்ற இந்த ஆராய்ச்சி ஸ்தாபனம் 1929ல் யுனைடெட் ஸ்டேட்ஸில் (அமெரிக்கா) ஒகியோவிலுள்ள கொலம்பஸ் என்ற இடத்தில் பாடெல்லே குடும்பத்தினரால் ஸ்தாபிககப்பட்டது. 1953 முதல் இதன் முக்கிய நடவடிக்கைகள் பிராங்பர்டிலுள்ள மத்திய கழகத்திற்கு மாற்றப்பட்டன. ஸ்விட்ஸர்லாந்திலுள்ள ஜெனிவாவில் ஒரு சிறு கழகமும் இருந்துவருகிறது. பாரிஸ், மிலான், மாட்ரிட், லண்டன் ஆகிய நகரங்களிலும் இக்கழகத்தைச் சேர்ந்த தொழில் நுணுக்க காரியாலயங்கள் இருந்துவருகின்றன. உலகின் விஞ்ஞான வளர்ச்சிக்கு இக்கழகம் பெரிதும் உபயோகமாக இருந்துவருகின்றது.

## அதிபர் இடமாற்றம்

காரைதீவு, செவ்வாய்

கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் தற்காலிக அதிபராய்க் கடமையாற்றிய திருமதி ஆர். சின்னையா மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரிக்கு அதிபராக மாற்றப்பட்டுள்ளார். மட்டக்களப்பு வின்சென்ட் மகளிர் கல்லூரியிலிருந்து இளைப்பாறிய அதிபர் செல்வி பத்மனின் இடத்திற்கே திருமதி சின்னையா செல்கிறார். இவர் ஏறக்குறைய கடந்த இருவருட காலம் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் தற்காலிக அதிபராகக் கடமையாற்றியுள்ளார்.

'சிரநேத்திரஞ்சனத் தைலம்'

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினால் துன்புறவும்

வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு

கொள்ளவும்:

மு. க. ஜெகநாதன்

யூனனி கண் நிபுணர்

பெரியகடை, யாழ்ப்பாணம்.

### மரண அறிவித்தல்

**பாலசுப்பிரமணியம்**—திருமதி கமலாம்பிகை அவர்களின் கணவரும், திரு. சிவானந்தன், கமலானந்தன் அவர்களின் தகப்பனாரும், திரு. க. சி. தங்கராஜா, டாக்டர் க. சி. சண்முகரத்தினம் அவர்களினது மைத்துனருமான, இளைப்பாறிய கலால் பரிசோதகர் **திரு. ஈ. எஸ். பாலசுப்பிரமணியம்** அவர்கள் செவ்வாய்க்கிழமை காலமானார். அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று 24-5-61 புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்தில் நடைபெறும்.

64, சிவன் பண்ணை வீதி,
யாழ்ப்பாணம்.


**25-ந் திகதி வியாழக்கிழமை முதல்!**
**பிளாஸா** (வெள்ளவத்தை) **மைலன்** (கொழும்பு) **நவா** (கும்பனித்தெரு)
உதயகுமார், எஸ். வரலக்ஷ்மி, கண்ணாம்பா, சூரியகலா நடித்த
**ஜெய பவானி**
டைரக்ஷன்: கே. பி. நாகபூஷணம்

கடைசி வாரம்!
**கிங்ஸ்லி** (கொழும்பு)



எஸ். எஸ். ராஜேந்திரன்
பி. சரோஜாதேவி, தங்கவேலு
மற்றும் பலர் நடித்த
**மணப்பந்தல்**

**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) காலை 10 மணிக்கும் 2 மணிக்கும் இருகாட்சிகள்
சிவாஜி கணேசன் - சரோஜாதேவி நடித்த
**பாகப்பிரிவினை**

**மனோஹரா** (யாழ்ப்பாணம்) காலை 10-30க்கு மட்டும்
பிரேம் நஸீர், பாலையா, ராஜம் நடித்த
**ஒரே வழி**

2 மணிக்கும் 4 மணிக்கும் இருகாட்சிகள் பிரேஜட்பாடோட் நடித்த
**தட் நோட்டி கேள்**
**THAT NAUGHTY GIRL**
(ENGLISH)


# தேர்தல் ஆள் மாருட்ட வழக்கில் எதிரி விடுதலை

யாழ்ப்பாணம், புதன்

சென்ற 1960-ம் வருஷம் ஜுலை மாதம் நடைபெற்ற பார்லிமெண்ட் தேர்தலில், யாழ்ப்பாணம் ராணி தியேட்டர் மண்டபத்தில், வாக்களிக்கும் ஸ்தலத்தில் மற்றொருவருக்கான தேர்தல் சீட்டைக் கேட்டதாகக் குற்றம் சாட்டி, சபாபதி சீவரத்தினம் என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரியையாழ்ப்பாணம்மாஜிஸ்திரேட் திரு. அரசு வால்டன் நேற்று விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் பலர் சாட்சியம் கொடுத்தபின், எதிரியை முன்னர் அடையாளம் காட்டிய டாக்டர் ஆனந்தராஜா படிக்க சீமைக்குச் சென்றிருப்பதாயும் அவர் திரும்ப 18 மாதமாகுமென்றும் எடுத்துக் கூறப்பட்டது. இவ்வித வழக்கு விசாரணையை 18 மாதம் நீடிக்க முடியாதென்றும் அந்த சாட்சியம் முக்கியமென்றும் கூறி, மாஜிஸ்திரேட் எதிரியை விடுதலை செய்தார். டாக்டர் ஆனந்தராஜா திரும்பியதும், பொலிசார் விரும்பினால் புதிதாக இவ்வழக்கைத் தொடரலாமென்றும் மாஜிஸ்திரேட் குறிப்பிட்டார்.

பொலிஸ் சார்ஜண்ட் வாமதேவன் பிராஸிகூஷன் தரப்பில் ஆஜரானார். எதிரிக்காக கொழும்பு திரு. அனில் முனசிங்காவும், திரு. எஸ். கனகரத்தினமும் வாதித்தனர்.

### கொப்பரா ஏற்றுமதி தீர்வை குறைப்பு

கொழும்பு, செவ்வாய்

சென்ற 6 மாதங்களாக தெங்குப் பொருள் விலைகள் குறைந்து வந்ததால் கொப்பரா, தேங்காய் எண்ணெய், தேங்காய்ப் பூ இவற்றின் ஏற்றுமதித் தீர்வையை அரசாங்கம் குறைத்திருக்கிறது. கொப்பரா தீர்வை டன் ஒன்றுக்கு 60 ரு குறைக்கப்பட்டு இனித் தீர்வை ரு 185 ஆக இருக்கும். தேங்காய் எண்ணெய் புதிய தீர்வை டன் ஒன்றுக்கு ரு 140. தேங்காய்ப் பூவுக்கு ரு. 100.

### வகுப்பு வாதிகளுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் ஆராயவேண்டும் வகுப்புவாத அபாயம்பற்றி எடுத்துக் கூற பொது ஜனத் தொடர்பு இயக்கம் ஒன்றை மேற்கொள்வதுடன், அரசாங்கத்துறையிலும், தனியார் துறையிலும் உயர்பதவிகளுக்குசிறுபான்மையினரை நியமிக்கவேண்டும் என்றும் ஸ்ரீமதி இந்திராகாந்தி தலைமையிலுள்ள இக்கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. கமிட்டியின் சிபார்சுகள் அடுத்து நடைபெறவிருக்கும் அகில பாரத காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படும்.

### ஜயாறன்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்விதமே புதிய பாரத்தில் எழுதிக் கொடுத்ததும், சில நிமிடங்களில் விஸா கிடைத்து விட்டது.

உங்களுக்கும் இந்த இரகசியம் சொல்லிவைக்கிறேன். இந்தியாவுக்கு யாத்திரை போவதாகக் காரணம் கூறுங்கள். மகாநாடு அல்லது கூட்டம் இவற்றுக்குச் செல்லுவதாக உண்மையை எழுதினால் போகவே முடியாது போய் விடும். விஸா கிடைத்த பின் இந்தியாவில் எங்கும் செல்லலாம் தானே!

இவ்விஷயத்தில் இந்திய ஹைகமிஷனுக்கு உசிதப்படி விஸா கொடுக்க அதிகாரமிருப்பின் இவ்வித வீண் ஏமாற்றங்களுக்கு இடமில்லாது போகும்.

### "இலங்கைச் சிறைகளில்இடமில்லை" உள்நாட்டு அமைச்சின் நடவடிக்கை

கொழும்பு, செவ்வாய்

இலங்கை சிறைச்சாலைகளில் இடமில்லை. கைதிகள் எண்ணிக்கை அதிகரித்துவிட்ட பிரச்சினையைத் தீர்க்க உள்நாட்டு அமைச்சு கீழ்க்கண்ட நடவடிக்கைகளை எடுக்க உத்தேசித்துள்ளதாகத் தெரிகிறது.

அபராதம் செலுத்தாததற்காக சிறை தண்டனை அனுபவிப்பவர்களை, விடுதலை செய்து அபராதத்தை பல தவணைகளில் செலுத்தும்படி கேட்கலாம்.

2. அபராதத்தை ஒவ்வொரு மாதமும் சிறை அதிகாரிகள் வசூலிக்கலாம்.

3. நீண்டகாலம் இருந்த கைதிகளுக்கு மன்னிப்பு அளிக்கலாம்.

4. சிறைக்கு பதில் அபராதம் விதிக்கக்கூடிய குற்றங்களுக்கு, அபராதமே விதிக்கும்படி மாஜிஸ்திரேட்டுகளைக் கேட்கலாம்.

"நாட்டின் சிறைகளில் இடமே இல்லை. வெளிக்கடை சிறையில் 1025 பேருக்கே இடமுண்டு. இப்போது அங்கு 1200 கைதிகள் அடைக்கப்பட்டிருக்கிறார்கள்" என்று உள்நாட்டு அமைச்சைச் சேர்ந்த அதிகாரி தெரிவித்தார்.

### ஸ்தலஸ்தாபன லிகிதர் பரீட்சை
#### இனி சிங்களம் அல்லது தமிழில் எழுதலாம்

கொழும்பு, செவ்வாய்

இதுவரை ஸ்தலஸ்தாபன லிகிதர் நியமனம் சம்பந்தமான பரீட்சைகள் ஆங்கிலத்தில் நடந்துவந்ததை இனி சிங்களத்திலும் தமிழிலும் முதல் முதலாக நடத்த இருக்கிறார்கள்.

பரீட்சைக்குத் தோற்றுகிறவர்கள் தங்கள் இஷ்டப்படி சிங்களத்திலோ தமிழிலோ பரீட்சை எழுதலாம். ஆனால் அவர்கள் வேலைக்கு நியமிக்கப்படுமுன் ஆங்கிலம் அல்லது தமிழில் ஒரு பரீட்சையில் தேறவேண்டும்.

உதாரணமாக சிங்களமொழி மூலம் பரீட்சை எழுதும் ஒருவர், ஆங்கிலம் அல்லது தமிழ்மொழி பரீட்சை ஒன்றில் தேறவேண்டும். தமிழ்மொழி மூலம் பரீட்சை எழுதுபவர், சிங்களம் அல்லது ஆங்கிலப் பரீட்சை ஒன்றில் தேறவேண்டும்.

### இலங்கையில் ஐ. நா. உரை அரங்கு

கொழும்பு, செவ்வாய்

ஐ. நா. கல்வி, சமூக, கலாசார ஸ்தாபனத்தின் ஆதரவில் இலங்கையில் உரை அரங்கு ஒன்று ஆரம்பமாகும். தென் கிழக்காசிய நாடுகள் பல இம்மகாநாட்டில் பங்குபற்றிக்கொள்ளும் இப்பிராந்தியங்களிலுள்ள பத்திரிகைகள், சஞ்சிகைகள், நகல்கள் ஆகியவற்றின் தரத்தை உயர்த்த கூட்டு முயற்சி பற்றி இந்த அரங்கு ஆராயும். தேசிய நூல்கள் டிரஸ்ட் பயிற்சிவகுப்பு ஒன்று நடத்தவும் ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருப்பது முன்பு அறிவிக்கப்பட்டிருந்தது.

### பிலிப்புக்கு ஒரு வாரம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை முதல்வர் திரு. ஸி. பி. டி' சில்வா கொண்டுவந்த பிரேரணை வாக்குக்கு விடப்பட்டபோது, சாதகமாக 64 வாக்குகளும், பாதகமாக 28 வாக்குகளும் பெற்று நிறைவேறியது.

### பிரமுகர்கள்

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஓய்வு பெற்ற கல்வி அதிகாரியும், திருக்கேதீஸ்வர ஆலயப் புனருத்தாரண சங்க மலாயாக் கிளையின் தலைவருமான திரு. டி. மயில்வாகனம் மலாயாவிலிருந்து இலங்கைக்கு விடுமுறையில் வந்திருக்கிறார். இப்போது அவர் மூளாயில் தங்கியிருக்கிறார்.

### செனட் சபை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சினை தீராது. அப்படியானால் அவர்கள் மீது சிவில் கோர்ட் சட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கலாம். சட்ட நடவடிக்கை எடுப்பதை விடுத்து, ராணுவ ஆட்சி நடத்துவது வெறுக்கத்தக்கது.

மட்டக்களப்பு, திருக்கோணமலையில் இன்னும் இராணுவத்தினரின் அட்டகாசம் தொடர்ந்து நடக்கிறது. இந்த இராணுவ நடவடிக்கை உடனடியாக நிறுத்தப்படவேண்டும். பொது மக்களுக்குக் கஷ்டம் விளைவிப்பதன் மூலம் பிரச்சினையைச் சமாளிக்கமுடியாது.

அமைதிநிலவ வேண்டுமானால் அரசாங்கம் நல்லமாதிரியாய் நடந்துகொள்ளவேண்டும்" என்றும் செனட்டர் நடேசன் குறிப்பிட்டார்.

### செய்திச் சுருக்கம்

அஸ்ஸாம் கலகத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மத்திய அரசாங்கம் 1கோடியே 20 லட்சரூபாய் நிவாரணம் வழங்கியுள்ளது. மேற்கு வங்காளத்திலிருந்த 39000 அகதிகளில் 18,000 பேர் அஸ்ஸாம் திருப்பி விட்டதாயும் அறிவக்கப்படுகிறது.

ஃ ஃ ஃ

டல்ஹௌஸியில் சித்தாந்த பௌதிகக் கல்லூரி ஒன்றை கலாச்சார மந்திரி திரு. இமாம் கபீர் திறந்து வைத்தார். இதிலும் இது போன்ற வேறு 3 கல்லூரியிலும் மொத்தம் 150 விஞ்ஞானிகள் பயிற்சி பெறுவார்கள்.

ஃ ஃ ஃ

டெல்காமில் 36 இலட்சம்ரூபா செலவில் தொழில் பேட்டை மைசூர் முதன் மந்திரி திறந்து வைத்தார்

ஃ ஃ ஃ

அங்கோலாநிலைபற்றி ஆராய 5பேர் கொண்ட துணைக்கமிட்டி ஒன்றை ஐ நா சபைத்தலைவர் திரு. போலந்து நியமித்துள்ளார்.

ஃ ஃ ஃ

கர்நாடக சங்கீதம், ஹிந்துஸ்தானியசங்கீதம், ஆகியவற்றுக்கான பட்டத்தேர்வு வகுப்புக்கள் ஹைதரபாத்திலுள்ள உஸ்மானியா சர்வகலாசாலையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. திரு. டி. சாம்பமூர்த்தி தலைமையில் இதற்கான போர்டு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஃ ஃ ஃ

அங்கோலாவில் நேபாகுண்டுகளையும், யந்திர பீரங்கிகளையும்கொண்டு பெரும் தாக்குதல் நடத்தப் போத்துக்கேயர் ஆயத்தம் செய்து வருகின்றனர். போத்துக்கலில் திரு. ஸலஸாரின் காலனி சாம்ராஜ்யம் பெருசீக்கிரம் தகர்ந்து விடுமென நியூஸ்டேட்மன் பத்திரிகை கூறியுள்ளது.


### விற்பனைக்கு

2 ஸ்ரீ. 4000 இலக்க லம்பிறெற்றா ஸ்கூட்டர். உரும்பிராய் இந்துக் கல்லூரியில் அல்லது கரவெட்டி தபாற்கந்தோர் ஒழுங்கையிலுள்ள வீட்டில் பார்வையிடலாம்.

வ. மகாலிங்கம்,
கரவெட்டி.


இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு மே மாதம் 24 ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.